போடப்பட்ட தடுப்புச் சுவர் நாசமாகிவிட்டது. ஆண்டொன்றிற்கு சுமார் 100 வீடுகள் நாசமாகின்றன. பல கோடி ரூபாய் உடமைகள் நாசமாகின்றன. இதனைத் தடுப்பதற்கு பெரிய பாறைகளால் தடுப்புச் சுவர் அமைக்கவும், நவீனமாகச் செய்யப்பட்ட பெரிய சிமெண்ட கற்களால் தடுப்புச் சுவர் அமைத்து—sand accumulation beach system மூலமாக தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், குறிப்பாக என் தொகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய பகுதிகளில் எப்போது இந்தப் பணிகளை ஆரம்பிப்பீர்கள் என்பதைத் தாங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மூன்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அடுத்த நிதியாண்டிலே ஒரு பணி துவங்கப்பட உள்ளது. மேலும், முக்கியமான பணிகள், தேவைப்படுகின்ற பணிகளுக்காக 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

சுற்றுலாத் தலம்

***2596—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) சிவகங்கை தொகுதி, மருது சகோதரர்களின் நினைவிடம் உள்ள காளையார் கோவில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மருது சகோதரர்களின் நினைவிடமான காளையார் கோவில் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக மத்திய, மாநில அரசுகள் நிதி உதவியுடன், சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுற்றுலா சுற்று திட்டத்தின்கீழ் ரூபாய் 84.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் குழந்தைகள் பூங்கா, தகவல் பலகைகள் அமைத்தல், மருதுபாண்டியர் நினைவுச் சின்னத்தைச் சுற்றியுள்ள பகுதியை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ஏற்கெனவே முடிவுற்று, தற்போது பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *நடைபெற்ற பணிகளுக்காக நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில், மருதுபாண்டியர் நினைவிடத்திற்குப் பின்னால் மிகப்பெரிய குளம் இருக்கிறது. அங்கு ஏற்கெனவே பணிகள் தொடங்கப்பட்டு பூர்த்தியடையாத ஒரு நிலையில், நிதிப் பற்றாக்குறையால் நடைபெறாமல் நின்று கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பணியையும் இந்தநேரத்தில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1862 ஆம் ஆண்டு இழந்த அரசு உரிமையை, 1869 ஆம் ஆண்டு வீரமங்கை வேலுநாச்சியார், மருதுபாண்டியர் போன்றவர்கள் எல்லாம் மக்களை இணைத்துக்கொண்டு, களத்திலே நின்று போராடி, ஆட்சி உரிமையைப் பெற்ற ஒரு மண், இந்திய வரலாற்றிலேயே சிவகங்கை மட்டும்தான், வெள்ளையர்களை எதிர்த்து களத்திலே நின்று வெற்றிபெற்ற இடம் அது. முழுமையான அந்த வெற்றிக்கு அடிப்படையான காரணம் அந்தப் பகுதியில் உள்ள மக்கள். இன்னும் சொல்லப்போனால்,*

அந்த வரலாற்றில், குயிலி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட வீரத்தாய், தன்னுடைய உடலிலே நெய்யை ஊற்றி, முதல் மனித குண்டாக அந்த வெடி கிடங்கிலே இறங்கி அந்த வெடி கிடங்கை சிதற அடித்த பின்னால்தான் அந்த வெற்றியே கிடைத்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களும், தலித் மக்களும், அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றுபட்டதால் அந்த மிகப்பெரிய வெற்றியை ஈட்ட முடிந்தது. அப்படிப்பட்ட மக்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான அந்த நாளை, ஒரு தேசிய வெற்றி நாளாக, மக்களின் ஒற்றுமை நாளாக, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்னும் ஆய்வுகளை மேற்கொண்டு, அறிவித்து, ஒரு மிகப்பெரிய விழாவாக நடத்திட வேண்டும். மறைந்த வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம், அதைப்போல வீரமங்கை வேலுநாச்சியாருக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் நேரடியாக இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். நிச்சயமாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களை எதிர்கொண்டு வெற்றி கண்ட வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவாக நினைவுச் சின்னம் தமிழக அரசால் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சு. குணசேகரன்: கோரிக்கை வைத்த அடுத்த நொடியே சுடச்சுட அந்தக் கோரிக்கையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதி மக்களுடைய மனம் குளிர நினைவுச் சின்னம் அமைத்துக்கொடுத்த நமது மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பாண்டி மக்களுக்கு இன்றைக்கு ஒரு மகா புருஷராக இருக்கின்ற, எங்களுடைய வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்பானது, தென் பாண்டி மக்களுடைய இதயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்து, உங்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்றைக்கும் தென் பாண்டி மக்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அம்மாவிற்குப் பின்னால் அணிவகுத்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

பேருந்து வசதி

***5473—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் சாலையில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் வரையில் உள்ள 16.5 கி.மீ. சாலையில் தாழையூத்து முதல் எம்.புதூர் வரையிலுள்ள 6 கி.மீ. பகுதி வனத் துறையின்